Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ்

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 312	உள்ளூர் - 12.11.2026	வியாழக்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 312	வெளியூர் - 13.11.2026	வெள்ளிக்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

ராகு-கேது பெயர்ச்சி: யாருக்கு யோகம்?

ரயில்வே, இஸ்ரோவில் 1,749 வேலைவாய்ப்புகள்!

பத்திரப்பதிவு: இனி ஆன்லைன் டோக்கன்!

பண்டிகைகளில் டாஸ்மாக் மூடப்படுமா?

பெங்களூருவில் மோடி! ரூ.15,600 கோடிக்கு மேல் வளர்ச்சித் திட்டங்கள்; மெட்ரோ சேவையையும் தொடங்கி வைக்கிறார்!



பெங்களூரு, நவ. 12–

பிரதமர் நரேந்திர மோடி, நவம்பர் 13, 14 ஆகிய தேதிகளில் கர்நாடகா மற்றும் குஜராத் மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இந்தப் பயணத்தில் மெட்ரோ சேவை தொடக்கம், வளர்ச்சித் திட்டங்கள், மரக்கன்று நடுதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

நாளை நவம்பர் 13ஆம் தேதி காலை 10.45 மணியளவில் பிரசாந்தி குதிரத்தின் பொன்விழா கொண்டாட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகிறார்.

பிற்பகல் 12.45 மணியளவில் தாவரக்கெரே முதல் பெங்களூரு ஐ.ஐ.எம். மெட்ரோ நிலையம் வரையிலான மெட்ரோ சேவையைத் தொடங்கி வைக்கும் பிரதமர், மெட்ரோ ரயிலிலும் பயணம் மேற்கொள்கிறார்.

தொடர்ந்து பிற்பகல் 1.15 மணியளவில் பெங்களூருவில் நடைபெறும் நிகழ்ச்சியில், ரூ.15,600 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். முடிவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து உரையாற்றுகிறார்.

பின்னர் மைசூரு செல்லும் பிரதமர், மாலை 3.30 மணியளவில் பாரத் வன் பகுதியில் மரக்கன்று நடும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். மாலை 4 மணியளவில் காஸ்மோஸ் வான்நோக்கி அரங்கைத் திறந்து வைத்து உரையாற்றுகிறார்.

பயணத்தின் இரண்டாம் நாளான நவம்பர் 14ஆம் தேதி, குஜராத் மாநிலம் பனஸ்கந்தாவில் உள்ள அம்பாஜி கோயிலில் பிரதமர் தரிசனம் செய்கிறார். அம்பாஜி கோயில், போற்றப்படும் 51 சக்தி பீடங்களில் ஒன்று என்று மத்திய அரசின் பத்திரிகைத் தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அமித்ஷா-அர்லேகர்: சட்டம் ஒழுங்கு ஆலோசனை!



சென்னை, நவ. 12–

தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை தில்லியில் நவம்பர் 13ஆம் தேதி சந்திக்க உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலவரம் குறித்த குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள சூழலில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

கேரள ஆளுநராக இருந்த அர்லேகருக்கு, கடந்த மார்ச் மாதம் தமிழக ஆளுநர் பொறுப்பும் கூடுதலாக வழங்கப்பட்டது. பின்னர் அக்டோபர் 12ஆம் தேதி தமிழகத்தின் முழுநேர ஆளுநராக அவர் நியமிக்கப்பட்டார். அதன்பிறகு அமித் ஷாவுடன் நடைபெறும் அவரது முதல் சந்திப்பு இதுவாகும்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன. தீபாவளியன்று எட்டு பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்களும், சிறைக்கைதிகள் தப்பிச் சென்ற நிகழ்வுகளும் இந்த விமர்சனங்களுக்கு வலுசேர்த்துள்ளன.

இதனிடையே, தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலவரம் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிக்கைகேட்டிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகின. இந்தப் பின்னணியில், அமித் ஷாவுடனான சந்திப்பில் மாநில நிலவரம் குறித்து ஆளுநர் விவாதிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. சந்திப்பின் அதிகாரப்பூர்வ நிகழ்ச்சி நிரல் குறித்த விவரங்கள் வெளியாகவில்லை.

தில்லி சந்திப்புக்குப் பிறகு ஜம்மு காஷ்மீர் செல்லும் அர்லேகர், நவம்பர் 14ஆம் தேதி அங்குள்ள தனியார் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க உள்ளதாகக் கூறப்படுகிறது. நவம்பர் 15ஆம் தேதி அவர் சென்னை திரும்புவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், புதுதில்லியிலுள்ள இந்தியாவிற்கான ஜெர்மன் நாட்டின் தூதர் டாக்டர் ஜாஸ்பர் வீக் (Dr.Jasper Wieck) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, சென்னையிலுள்ள ஜெர்மன் நாட்டின் துணைத் தூதர் மைக்கேல் ஹாஸ்பர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

அரசு ஊழியர்களுக்கு மின்சார கார் கட்டாயம்!



புதுடெல்லி, நவ. 12–

இந்தியாவை 2070–ம் ஆண்டுக்குள் கார்பன் உமிழ்வு இல்லாத நாடாக மாற்ற மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. சர்வதேச எரிசக்தி முகமையின் தகவலின்படி, நமது நாட்டின் மொத்த கார்பன் உமிழ்வில் போக்குவரத்து துறையின் பங்கு 12 சதவீதமாக உள்ளது.

இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 90 சதவீதம் இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது. எனவே மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலம் வெளிநாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை குறைக்கவும், வாகனங்களால் ஏற்படும் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்தவும் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக மத்திய அரசு ஊழியர்களுக்கான அதிகாரப்பூர்வ பயன்பாட்டு கார்களாக இனி மின்சார வாகனங்களையே வாங்க வேண்டும் என்று மத்திய நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது.

பெட்ரோல், டீசல் கார்களுக்கு மாற்றாக மின்சார வாகனங்கள் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அரசு அலுவலகங்களில் மின்சார வாகனங்களை பயன்படுத்தும் இந்த முடிவு, நாட்டின் வாகன துறையில் பசுமை மாற்றத்தை விரைவுபடுத்தும் முக்கிய நடவடிக்கையாக கருதப்படுகிறது.

இதுதொடர்பாக மத்திய செலவின துறை வெளியிட்டுள்ள அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

மத்திய அமைச்சகங்கள் மற்றும் அரசு துறைகள், தற்போது பயன்பாட்டில் உள்ள பெட்ரோல், டீசல் கார்கள் பழுதடைந்து மாற்றப்படும்போதோ அல்லது பயன்பாட்டில் இருந்து ஓய்வு கொடுக்கும்போதோ அவற்றுக்கு பதிலாக மின்சார கார்களையே வாங்க வேண்டும். மின்சார வாகனங்களுக்கு பதிலாக பெட்ரோல் அல்லது டீசல் கார்களை வாங்க விரும்பும் துறைகள், அதற்கான காரணங்களை விளக்கி விரிவான திட்ட அறிக்கையை மத்திய செலவின துறையிடம் சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டும். மின்சார வாகனங்களின் கொள்முதலுக்கான உச்சவரம்பு ரூ.20 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. பெட்ரோல், டீசல் மற்றும் இரண்டு வகையான எரிபொருட்களை பயன்படுத்தும் கலப்பின கார்களுக்கு இந்த வரம்பு ரூ.10 லட்சமாக உள்ளது. வாகனங்களின் விலை, அவற்றின் பயன்பாட்டுக்கான பராமரிப்பு செலவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வரைவு வாக்காளர்

பட்டியல் வெளியீடு! பெயர் சேர்க்க, திருத்த

டிசம்பர் 11 வரை அவகாசம்!!



சென்னை, நவ. 12–

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தப் பணிகளுக்காக மாவட்டம்தோறும் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது. சென்னையில் மாநகராட்சி ஆணையரும், பிற மாவட்டங்களில் ஆட்சியர்களும் பட்டியலை வெளியிட்டனர்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் விவரங்களைத் திருத்துவதற்கு டிசம்பர் 11ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

இதற்காக விடுமுறை நாள்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என அறிவிக்க ப்பட்டுள்ளது. சென்னையில் தீவிர சிறப்புத் திருத்தத்துக்குப் பிறகு சுமார் 84 ஆயிரம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டு, மொத்த எண்ணிக்கை 29,14,908 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் ஆண்கள் 14,04,968, பெண்கள் 15,09,040, மூன்றாம் பாலினத்தவர் 900 பேர்.

சென்னையில் அதிகபட்சமாகப் பெரம்பூர் தொகுதியில் 2,28,139 வாக்காளர்களும், குறைந்தபட்சமாகத் துறைமுகம் தொகுதியில் 1,20,852 வாக்காளர்களும் உள்ளனர். வாக்குச்சாவடி மறுசீரமைப்புக்குப் பிறகு சென்னையின் வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை 4,079–லிருந்து 4,071 ஆக மாறியுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் 12,59,510 வாக்காளர்கள் உள்ளதாக மாவட்டத் தேர்தல் அதிகாரி சரவணன் தெரிவித்துள்ளார். பட்டியலில் சேர்க்கப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட வாக்காளர்களின் விவரங்களை வெளியிட வேண்டும் என அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

எம்.எல்.ஏ.க்களுக்கு விஜய் எச்சரிக்கை! எதிர்க்கட்சியினருடன் தொடர்பு வைத்தால் நடவடிக்கை எனத் தகவல்!!



சென்னை, நவ. 12–


மாமல்லபுரத்தை அடுத்த பேரூரில் உள்ள நட்சத்திர விடுதியில் நவம்பர் 11ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில், த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர்களுடன் விஜய் ஆலோசனை நடத்தியதாகக் கூறப்படுகிறது. த.வெ.க. அரசுக்கு ஆறு மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், சட்டமன்றத்தில் அக்கட்சிக்கு 109 உறுப்பினர்கள் இருப்பதாகவும், தனிப்பெரும்பான்மைக்கு மேலும் ஒன்பது இடங்கள் தேவைப்படுவதாகவும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், சில அமைச்சர்களும் எம்.எல்.ஏ.க்களும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களுடன் தொடர்பில் இருப்பதாகக் கட்சித் தலைமைக்குத் தகவல் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. உளவுத்துறை பட்டியலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 30 எம்.எல்.ஏ.க்களை விஜய் தனித்தனியாக அழைத்துப் பேசி எச்சரித்துள்ளதாகவும் செய்தி தெரிவிக்கிறது.

எதிர்க்கட்சிகளின் முயற்சிகளுக்கு இடமளிக்கக்கூடாது என்றும், இதுபோன்ற செயல்கள் தொடர்ந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் அறிவுறுத்தியதாகக் கூறப்படுகிறது. சில உறுப்பினர்கள் ஒப்பந்ததாரர்களிடம் கமிஷன் கேட்பதாகப் புகார்கள் வந்திருப்பதாகவும் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், அமைச்சர் ஸ்ரீநாத், எம்.எல்.ஏ.க்கள் முஸ்தபா, வி.எஸ்.பாபு ஆகிய நால்வர் பங்கேற்கவில்லை. விஜய் வருவதற்கு முன்பு உறுப்பினர்களிடம் வெள்ளைத்தாளில் கையெழுத்து பெறப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அரசு அதிகாரிகள் குறித்து சில உறுப்பினர்கள் தெரிவித்த புகார்களை விசாரிப்பதாக விஜய் உறுதியளித்ததாகத்தகவல்வெளியாகியுள்ளது. கூட்டத்தின் முடிவில் ஆண் உறுப்பினர்களுக்குப் பட்டு வேட்டி சட்டை, பெண் உறுப்பினர்களுக்குப் பட்டுச் சேலை மற்றும் இனிப்புகள் தீபாவளிப் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

சபரிமலை நடை திறப்பு: 2027 பட்டியல்!



திருவனந்தபுரம்,நவ. 12–

சபரிமலை ஐயப்பன் கோவிலில் நடப்பு மண்டல, மகர விளக்கு சீசன் முதல் 2027–ம் ஆண்டின் மண்டல சீசன் வரையில் நடை திறக்கப்படும் நாட்கள். சிறப்பு பூஜை குறித்த விவரங்களை திருவிதாங்கூர் தேவஸ்தானம் ஒரு செய்திக்குறிப்பை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:–

மண்டல பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை வருகிற 16–ந்தேதி (திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு திறக்கப்படுகிறது. அன்றைய தினம் சபரிமலை மற்றும் மாளிகப்புரம் கோவில்களுக்கான புதிய மேல்சாந்திகள் தந்திரி முன்னிலையில் மூல மந்திரம் சொல்லி பதவி ஏற்கிறார்கள். மறுநாள் 17–ந்தேதி (கார்த்திகை 1–ந்தேதி) முதல் புதிய மேல்சாந்திகள் நடையை திறந்து பூஜைகளை நிறைவேற்றுவார்கள். நடப்பாண்டின் மண்டல பூஜை டிசம்பர் 27–ந்தேதி நடக்கிறது. அன்று இரவு நடை சாத்தப்பட்டு மீண்டும் மகரவிளக்கு பூஜைக்காக டிசம்பர் 30–ந்தேதி நடை திறக்கப்படும். மகரவிளக்கு பூஜை ஜனவரி 14–ந்தேதி நடைபெறும்.

மேலும் 20–ந்தேதி பந்தளம் ராஜ குடும்ப பிரதிநிதியின் சிறப்பு தரிசனத்திற்கு பிறகு கோவில் நடை அடைக்கப்படுவதுடன் சீசன் நிறைவுக்கு வரும்.

பின்னர் மாசி மாத பூஜைக்காக சபரிமலை கோவில் நடை பிப்ரவரி 12–ந் தேதி திறக்கப்பட்டு 17–ந் தேதி அடைக்கப்படும்.

பங்குனி மாத பூஜைக்காக மார்ச் 14–ந் தேதி முதல் 19–ந் தேதி வரை சிறப்பு பூஜை நடைபெறும். முன்னதாக பங்குனி ஆராட்டு திருவிழாவை முன்னிட்டு மார்ச் 12–ந் தேதி நடை திறக்கப்படும். 13–ந் தேதி திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். 22–ந் தேதி ஆராட்டுடன் 10 நாட்கள் விழா நிறைவு பெறும்.

சித்திரை மாத பூஜைக்காக ஏப்ரல் 10–ந் தேதி நடை திறக்கப்படும். 15–ந்தேதி விஷு பண்டிகைக்காக சிறப்பு பூஜை நடைபெறும். இதனை தொடர்ந்து 19–ந் தேதி நடை அடைக்கப்படும்.

வைகாசி மாத பூஜைக்காக மே மாதம் 14–ந் தேதி நடை திறக்கப்பட்டு 5 நாள் சிறப்பு பூஜைக்கு பிறகு 19–ந் தேதி நடை அடைக்கப்படும். பிரதிஷ்டை தினத்தை முன்னிட்டு ஜூன் 12–ந் தேதி நடை திறக்கப்படும். 13–ந் தேதி பிரதிஷ்டை சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். ஆனி மாத பூஜைக்காக ஜூன் 15–ந் தேதி முதல் 20–ந் தேதி வரையும், ஆடி மாத பூஜைக்காக ஜூலை 16–ந் தேதி முதல் 21–ந் தேதியும். ஆவணி மாத பூஜைக்காக ஆகஸ்டு 17–ந் தேதி முதல் 22–ந் தேதி வரையும் நடை திறக்கப்பட்டிருக்கும்.

ஓணம் பண்டிகை சிறப்பு பூஜைக்காக செப்டம்பர் 10–ந் தேதி திறக்கப்பட்டு 15–ந் தேதி அடைக்கப்படும்.

புரட்டாசி மாத பூஜைக்காக செப்டம்பர் 17–ந் தேதி முதல் 22–ந் தேதி வரையும், ஐப்பசி மாத பூஜைக்காக அக்டோபர் 17–ந் தேதி முதல் 22–ந் தேதி வரையும் கோவிலில் சிறப்பு வழிபாடு நடைபெறும். சித்திரை திருநாள் மகாராஜா பிறந்த நாளை யொட்டி, அக்டோபர் 28–ந் தேதி நடை திறக்கப்படும். மறுநாள் சிறப்பு பூஜைகளுக்கு பிறகு நடை அடைக்கப்படும். பின்னர் 2027 மண்டல சீசன் நவம்பர் 16–ந் தேதி ஆரம்பமாகும். மண்டல பூஜை டிசம்பர் 27–ந் தேதி நடைபெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நடப்பு மண்டல சீசனை முன்னிட்டு சபரிமலையில் தங்கும் அறைகளுக்கான ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது. அதற்கான முன்பதிவு நேற்று மாலை 5 மணி முதல் https://www.onlinetdb.com என்ற இணைய தளத்தில் தொடங்கியது.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 12.11.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 26-ம் தேதி

உயிருடன் விளையாடாதீர்!



நோயிலிருந்து மீள வேண்டும் என்ற நம்பிக்கையுடன் மருத்துவமனையை நாடுபவருக்கு முதலில் கிடைக்க வேண்டியது உண்மையான தகவல். அச்சத்தையும் அவசரத்தையும் பயன்படுத்தி அவரைச் சிகிச்சைக்குள் இழுக்கும் விளம்பர உத்திகள் அல்ல. மருத்துவ விளம்பரங்களில் மிகைப்படுத்தப்பட்ட வாக்குறுதிகளைக் கட்டுப்படுத்துவது, மக்களின் உடல்நலத்தையும் வாழ்நாள் சேமிப்பையும் பாதுகாக்கும் அடிப்படைப் பொறுப்பு.

ஒரு மருத்துவமனையில் என்னென்ன வசதிகள் உள்ளன, எந்தத் துறைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது, மருத்துவர்களின் தகுதிகள் என்ன என்பன போன்ற தகவல்கள் பொதுமக்களுக்குத் தேவை. ஆனால், சேவையை அறிமுகப்படுத்துவதற்கும் நோயாளியின் நம்பிக்கையை வணிகமாக்குவதற்கும் இடையே தெளிவான எல்லை இருக்க வேண்டும். 'முழுமையான குணம்', 'தோல்வியே இல்லாத சிகிச்சை', 'நாங்களே முதலிடம்' போன்ற கூற்றுகள் ஆதாரத்தின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு நோயாளியின் உடல்நிலையும் வேறுபடுகிறது. வயது, நோயின் தன்மை, ஏற்கெனவே உள்ள உடல்நலப் பிரச்சினைகள், சிகிச்சைக்கான உடலின் எதிர்வினை ஆகியவை முடிவுகளைப் பாதிக்கலாம். இந்த வேறுபாடுகளை மறைத்துவிட்டு அனைவருக்கும் ஒரே பலனை உறுதிப்படுத்தும் விளம்பரம், நோயாளி தகவலறிந்து முடிவெடுக்கும் வாய்ப்பைப் பறிக்கிறது.

சமூக வலைத்தளங்கள் மருத்துவ விளம்பரங்களின் வீச்சைப் பெருதாக்கியுள்ளன. நேர்த்தியான காணொளி, பிரபலத்தின் பரிந்துரை, ஆயிரக்கணக்கான விருப்பக்குறிகள் ஆகியவை ஒரு சிகிச்சைக்கு நம்பகத்தன்மை இருப்பதுபோன்ற தோற்றத்தை உருவாக்கலாம். ஆனால், விளம்பரத்தின் கவர்ச்சியும் மருத்துவத்தின் தரமும் ஒன்றல்ல. மக்களிடம் செல்வாக்கு பெற்றிருப்பது, மருத்துவ ஆதாரத்துக்கு மாற்றாகிவிட முடியாது. செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி இந்தச் சிக்கலை மேலும் தீவிரப்படுத்துகிறது. உண்மையானவர் போன்ற உருவங்கள், இயல்பான குரல்கள், நம்பவைக்கும் காட்சிகள் ஆகியவற்றை உருவாக்கும் வசதி இன்று உள்ளது. இவற்றைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் மருத்துவப் பரிந்துரைகளில் உண்மை எது, புனைவு எது என்பதைச் சாதாரண மக்கள் கண்டறிவது கடினம். தொழில்நுட்பம் வளரும்போது கண்காணிப்பும் அதற்கேற்ப வலுப்பெற வேண்டும்.

நோயாளிகளின் அனுபவப் பகிர்வுகளிலும் பொறுப்புணர்வு தேவை. ஒருவருக்குக் கிடைத்த நல்ல பலன், அனைவருக்கும் அதே முடிவு கிடைக்கும் என்பதற்கான சான்றாகாது. குறிப்பாக, சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் சாதகமான மதிப்புரைகளைப் பதிவிடுமாறு வற்புறுத்துவது ஏற்கத்தக்கதல்ல. மருத்துவ உதவியைச் சார்ந்திருக்கும் அவர்களின் நிலையையும் நன்றியுணர்வையும் விளம்பரத்துக்கான மூலதனமாகப் பயன்படுத்தக்கூடாது.

எனவே, மருத்துவ விளம்பரங்களுக்கான கட்டுப்பாடுகள் எந்த ஊடகத்தில் வெளியிடப்படுகின்றன என்பதைக் கடந்து செயல்பட வேண்டும். செய்தித்தாள் விளம்பரம், தொலைக்காட்சி நிகழ்ச்சி, சமூக வலைத்தளப் பதிவு, கட்டண நேர்காணல், பிரபலங்களின் பரிந்துரை என அனைத்திலும் ஒரே பொறுப்புணர்வு அவசியம். விற்பனை நோக்கமுள்ள விளம்பரத்தை 'விழிப்புணர்வு நிகழ்ச்சி' என்று பெயர்மாற்றுவதால் அதன் தன்மை மாறிவிடாது.

விதிகளை வெளியிடுவதுடன் அரசின் கடமை முடிந்து விடுவதில்லை. புகார் அளிக்க எளிய வழிமுறை, குறிப்பிட்ட காலத்துக்குள் விசாரணை, தவறான விளம்பரங்களை விரைந்து அகற்றுதல், உரிய திருத்தங்களை வெளியிடச் செய்தல் ஆகியவை நடைமுறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். சர்ச்சைக்குரிய மருத்துவக் கூற்றுகளுக்கு ஆதாரம் கோரும் கண்காணிப்பு முறையும் தேவை.

தவறான விளம்பரம் பரவிய பிறகு அதை அகற்றுவது மட்டும் போதாது. அந்த விளம்பரத்தைப் பார்த்த மக்களிடம் திருத்தப்பட்ட தகவலும் சென்றடைய வேண்டும். மீண்டும் மீண்டும் விதிமீறுவோர் மீது, மீறலைத் தொடர்வதால் கிடைக்கும் வணிகப் பலனைவிடக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் அவசியம்.

ஊடகங்களும் இந்தப் பொறுப்பிலிருந்து விலக முடியாது. செய்திகளில் ஆதாரம் கேட்கும் நிறுவனங்கள், மருத்துவ விளம்பரங்களிலும் அதே அக்கறையைக் காட்ட வேண்டும். விளம்பர வருவாய்க்காக ஆதாரமற்ற குணப்படுத்தும் வாக்குறுதிகளுக்கு இடமளிப்பது வாசகர்களின் நம்பிக்கையைப் பாதிக்கும். விளம்பரத்தை ஏற்கும் முன்பே அதன் முக்கியக் கூற்றுகளுக்கான சான்றுகளைக் கோரும் நடைமுறை வலுப்பெற வேண்டும்.

அதேவேளையில், பொறுப்பான மருத்துவத் தகவல் பரிமாற்றம் ஊக்குவிக்கப்பட வேண்டும். நோய்த்தடுப்பு, பரிசோதனைகளின் அவசியம், சிகிச்சை வாய்ப்புகள், எதிர்பார்க்கக்கூடிய பலன்கள், சாத்தியமான ஆபத்துகள் ஆகியவற்றை மருத்துவர்கள் எளிய மொழியில் விளக்குவது மக்களுக்கு உதவும். சிகிச்சையின் வரம்புகளை வெளிப்படையாகக் கூறுவதும் மருத்துவ நேர்மையின் ஓர் அங்கமே.

மருத்துவத் துறையின் நீண்டகால மதிப்பை அதன் விளம்பரச் சத்தம் தீர்மானிப்பதில்லை. மருத்துவர்களின் திறமை, நோயாளிகளிடம் காட்டும் பரிவு, கட்டணங்களில் வெளிப்படைத்தன்மை, சிகிச்சையில் பொறுப்புணர்வு ஆகியவையே அந்த மதிப்பை உருவாக்குகின்றன. தவறான விளம்பரங்களைத் தடுக்க மருத்துவ அமைப்புகளும் முன்வர வேண்டும். மக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதே மருத்துவ விளம்பரக் கட்டுப்பாடுகளின் உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கு உறுதியான விதிகளுடன் தொடர்ச்சியான கண்காணிப்பும் பாரபட்சமற்ற அமலாக்கமும் தேவை.

நோயாளியின் நம்பிக்கை, வணிகத்தின் இரையாகக் கூடாது.
சிகிச்சையைப் பற்றிய ஒவ்வொரு வாக்குறுதியும்
உண்மைக்குப் பதில் சொல்ல வேண்டும்!

ஆசிரியர்
மதுரை மணி

தூய்மை நகரங்கள் விருது: நவி மும்பைக்கு முதலிடம்; தமிழகத்தில் தேனி அல்லிநகரம் தேர்வு!



புதுடில்லி, நவ. 12–
2025–26ஆம் ஆண்டுக்கான தூய்மை நகரங்கள் விருதுகளை, புதுடில்லி விஞ்ஞான் பவனில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கினார். ஸ்வச் பாரத் மிஷன் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், நாடு முழுவதும் 4,751 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

மகாராஷ்டிராவின் நவி மும்பை முதலிடத்தையும், குஜராத்தின் சூரத் இரண்டாவது இடத்தையும், ஆந்திரப் பிரதேசத்தின் விஜயவாடா மூன்றாவது இடத்தையும் பெற்றன. தொடர்ந்து எட்டு ஆண்டுகளாக முதலிடத்தில் இருந்த இந்தூரைத் தொடர்ந்து, இம்முறை நவி மும்பை முன்னிலை பெற்றுள்ளது.

பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்களின் பிரிவில், விசாகப்பட்டினம், ஜபல்பூர், லக்னோ ஆகிய நகரங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்தன.

மூன்று லட்சம் முதல் பத்து லட்சம் மக்கள்தொகை கொண்ட நகரங்களில் உஜ்ஜைன் முதலிடம் பெற்றது. சண்டிகர், குண்டூர் ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றன.

50 ஆயிரம் முதல் மூன்று லட்சம் மக்கள்தொகை கொண்ட நகரங்களுக்கான பிரிவில் திவாஸ் முதலிடத்தைப் பெற்றது. புதுடில்லி நகராட்சி கவுன்சில் பகுதியும், சாகரும் அடுத்த இரண்டு இடங்களில் இடம்பெற்றன.

20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட நகரங்களில் மகாராஷ்டிராவின் விதா முதலிடத்தைப் பிடித்தது. ஒடிசாவின் அஸ்கா இரண்டாவது இடத்தையும், கோவாவின் பானாஜி மூன்றாவது இடத்தையும் பெற்றன.

20 ஆயிரத்துக்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகரங்கள் பிரிவில் சத்தீஸ்கரின் பிஹ்ரா முதலிடம் பெற்றது. பஞ்சகானி மற்றும் புத்னி ஆகிய நகரங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றன.

நதிக்கரை நகரங்கள் பிரிவில் ரேவா, பிலாஸ்பூர், வாரணாசி ஆகியவை முதல் மூன்று இடங்களைப் பிடித்தன. இமயமலை நகரங்கள் பிரிவில் ருத்ரபூர், ஜம்மு, சோபியான் ஆகிய நகரங்கள் முன்னிலை பெற்றன.

கடற்கரை நகரங்களுக்கான பிரிவில் ஒடிசாவின் பூரி முதலிடத்தையும், கேரளாவின் ஆலப்புழா இரண்டாவது இடத்தையும், மகாராஷ்டிராவின் ரத்தினகிரி மூன்றாவது இடத்தையும் பெற்றன.

தமிழகத்தின் தூய்மையான நகரமாக தேனி அல்லிநகரம் தேர்வு செய்யப்பட்டது. இதற்கான விருதை நகராட்சி ஆணையர் பார்கவி, குடியரசுத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

மோகனூர் அருகே நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சியர் கலந்துகொண்டு, 177 பயனாளிகளுக்கு ரூ.61.90 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

நாமக்கல், நவ. 12–
மோகனூர் தாலுகா, பரளி கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெற்றது. நாமக்கல் எம்.பி., மாதேஸ்வரன் முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சியர் மதுபாலன் தலைமை வகித்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

பின்னர் பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் 177 பயனாளிகளுக்கு ரூ. 61.90 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது: இன்றைய தினம் மக்கள் தொடர்பு திட்டம் முகாமில் அரசின் சார்பில் பல்வேறு துறைகளின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், அதனை பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்கள் மூலம் பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.



இதனை மக்கள் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். மேலும் உங்களுக்கு எளிதாக புரியும் வகையில், என்னென்ன திட்டங்கள் உள்ளன, யார் யார் பயன்படுத்த முடியும், அரசு என்னென்ன உதவிகளை செய்து வருகிறது என்பதை விளக்கும் வகையில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அரசின் திட்டங்களை அறிந்துகொண்டு அனைவரும் பயன்பெற வேண்டும்.

தமிழக அரசால் ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக டிஎன் வெற்றித்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக வெற்றி வீடு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதற்கான பயனாளிகளை தேர்வு செய்யும் பணி விரைவில் தொடங்க உள்ளது.

உங்களிடம் பட்டா இருந்து, வீடு இல்லை என்றால், உங்கள் ஊராட்சி செயலாளரை அணுகி அதற்கான மனுவை கொடுக்க வேண்டும். அப்படி கொடுத்தால், இந்த திட்டத்தில் நீங்கள் இலவசமாக வீடு பெற முடியும். இதற்காக தமிழ்நாடு அரசின் மூலம் ரூ. 5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

பழனி முருகன் மலைக் கோவிலில் ரோப் கார் அந்தரத்தில் நின்றால் பக்தர்களை எப்படி மீட்பது என்பது குறித்து ஒத்திகை!

பழனி நவம்பர் 12–
பழனி முருகன் மலைக் கோவிலில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துவர வசதியாக ரோப் கார் வசதி உள்ளது. இந்த ரோப் கார் செல்லும்பொழுது நடுவழியில் பழுதாகி நின்றாலோ, அல்லது விபத்து ஏதாவது ஏற்பட்டால், அதில் பயணிக்கும் பக்தர்களை எப்படி மீட்பது என்பது குறித்து ஒத்திகை ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அதன் படி நேற்று ஒத்திகை நடைபெற்றது. முதலில் பழனி தீயணைப்பு துறையினர் சார்பில் மீட்பு ஒத்திகை நடைபெற்றது. அதன் பின்பு அரக்கோணத்தில் இருந்து



வந்திருந்த தேசிய பேரிடர் மீட்பு படையினர் குழு கமாண்டர் இன்ஸ்பெக்டர் கலையரசன் தலைமையில் குழுவினர் ஒத்திகையில் ஈடுபட்டனர். குறிப்பாக ரோப் கார் இயக்கப்பட்டு நடு வழியில் நிறுத்தப்பட்டது. பின்பு பேரிடர் மீட்பு படையினர் கயிறுகளை கட்டி நிறுத்தப்பட்ட ரோப் கார் பெட்டிகளில் ஏறி ஒத்திகை பார்த்தனர். இதற்கான நிகழ்ச்சியில் கோயில் இணை ஆணையர் ஹரிஹரன் துணை ஆணையர் வெங்கடேசன் பழனி தாசில்தார் சஞ்சய் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.


விருப்பாட்சியில் மக்கள் தொடர்பு முகாம்: 190 பயனாளிகளுக்கு ரூ.70.58 லட்சம் நலத்திட்ட உதவிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி வழங்கினார்!

ஒட்டன்சத்திரம், நவ. 12–
திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகே விருப்பாட்சி வண்ணக் கருப்பணசுவாமி கோவில் வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் துர்காமூர்த்தி தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது.

இதில், அரசின் பல்வேறு துறைகள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சிகளை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார். தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வருவாய்த்துறை, மருத்துவத்துறை, வேளாண்மைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் மொத்தம் பழனி வருவாய் கோட்டாட்சியர் பிரியங்கா, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் கோவிந்தராசு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஹென்றி பீட்டர்,மாவட்ட சுகாதார அலுவலர் (பழனி)மரு.மோ. அனிதா,துணை இயக்குனர் (காசநோய்) மரு.சந்திரிபிரியா துணை ஆட்சியர் (பயிற்சி) எஸ். திவ்யலட்சுமி,தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை துணை இயக்குனர் (திண்டுக்கல்) காயத்ரி

மாவட்ட சமூக நல அலுவலர் எஸ். கரோலின் செல்வராணி, ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் மு.ஸ்வேதா, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் மு. ஜெகதீஸ்வரன், ஒட்டன்சத்திரம் வருவாய் ஆய்வாளர் பூர்ணிமா, விருப்பாச்சி கிராம நிர்வாக அலுவலர் ரகுபதி உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர் லட்சுமி நன்றி கூறினார்.



ராகு-கேது பெயர்ச்சி: யாருக்கு யோகம்?



வரும் டிசம்பர் 5ஆம் தேதி நிகழவுள்ள ராகு கேது பெயர்ச்சியில், ராகு மகர ராசிக்கும் கேது கடக ராசிக்கும் இடம்பெயரவுள்ளதாக ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. சுமார் 18 ஆண்டுகளுக்குப் பிறகு கடக ராசிக்குச் செல்லும் கேது, அங்கு 566 நாட்கள் சஞ்சரிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் பெயர்ச்சி மேஷம், சிம்மம், கன்னி, விருச்சிகம், மீனம் ஆகிய ஐந்து ராசிகளுக்குச் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

கடகத்தில் கேது: பொதுவான பலன்கள்

வேத ஜோதிடத்தில் ராகுவும் கேதுவும் நிழல் கிரகங்களாகக் கருதப்படுகின்றன. ஞானம், ஆன்மிகம், பற்றின்மை மற்றும் திடீர் மாற்றங்களுடன் கேது தொடர்புபடுத்தப்படுகிறார். பின்னோக்கி நகரும் இயல்புடைய கேது, தற்போது சிம்ம ராசியில் சஞ்சரிப்பதாகக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனம் மற்றும் உணர்வுகளுடன் தொடர்புடைய சந்திரனின் ஆட்சி வீடான கடகத்தில் கேது நுழைவதால், குடும்ப உறவுகள் மற்றும் மனநிலையில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என ஜோதிடத்தில் கூறப்படுகிறது. குடும்பம், தொழில் மற்றும் வேலை சார்ந்த விஷயங்களில் அமைதியின்மை, கோபம், மனக்குழப்பம் போன்றவை தோன்றலாம். உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கவில்லை என்ற எண்ணமும் ஏற்படலாம். இத்தகைய சவால்களுக்கு இடையே, சில ராசிகளுக்கு முன்னேற்ற வாய்ப்புகள் உருவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

மேஷம்: பதவி உயர்வும் பொருளாதார முன்னேற்றமும்

மேஷ ராசியினருக்குப் பணியிடத்தில் பதவி உயர்வு மற்றும் புதிய பொறுப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. நிதிநிலையை மேம்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் பலனளித்து, எதிர்பார்த்த பொருளாதார வளர்ச்சி ஏற்படக்கூடும்.

நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பணிகளை முடிப்பதற்கான சூழல் உருவாகலாம். தெளிவான சிந்தனையுடன் நீண்ட காலப் பயனை நோக்கிச் செயல்பட முடியும். முக்கியத் திட்டங்களில் பங்கேற்கும் வாய்ப்புகளும், கடின உழைப்புக்கான அங்கீகாரமும் கிடைக்கலாம். நல்ல செய்திகள் வந்து சேரக்கூடிய காலமாகவும் இது அமையலாம்.

சிம்மம்: பணிச்சுமை குறைந்து புதிய வாய்ப்புகள் உருவாகலாம்

சிம்ம ராசியிலிருந்து கேது விலகுவதால், தொழில் மற்றும் வேலை சார்ந்த முயற்சிகளில் சாதகமான பலன்கள் கிடைக்கக்கூடும். வேலை தேடுபவர்களுக்குத் தகுதிக்கேற்ற வாய்ப்புகளும் புதிய ஒப்பந்தங்களும் கிடைக்கலாம்.

பணியில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு அல்லது கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படலாம். நீண்ட காலமாக இருந்த பணிச்சுமை குறைந்து மன அமைதி ஏற்பட வாய்ப்புள்ளது. முக்கிய முடிவுகளைத் தெளிவாக எடுத்து, அவற்றில் வெற்றி காணக்கூடிய சூழலும் உருவாகலாம்.

கன்னி: வருமான உயர்வும் நிலுவைப் பணம் கிடைக்கும் வாய்ப்பும்

கன்னி ராசியினருக்கு நிதி ஆதாயங்களும் புதிய வருமான வாய்ப்புகளும் உருவாகக்கூடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாகக் கிடைக்காமல் இருந்த பணம் திரும்பக் கிடைக்க வாய்ப்புள்ளது.

நீதிமன்ற வழக்குகளில் எதிர்பார்த்த சாதகமான முடிவுகள் கிடைக்கலாம். நிலுவைப் பணிகளை முடிக்க எடுக்கும் முயற்சிகளும் பலனளிக்கக்கூடும். போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகுபவர்களுக்கு முன்னேற்றமும் எதிர்பார்த்த வெற்றியும் கிடைக்க வாய்ப்புள்ளது. தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கக்கூடிய காலமாக இது அமையலாம்.

விருச்சிகம்: தொழில் வளர்ச்சியும் முதலீடுகளால் ஆதாயமும்

விருச்சிக ராசியினருக்குப் பணியிடத்தில் முன்னேற்றமும் தொழிலில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளும் கிடைக்கக்கூடும். முயற்சிகளுக்குப் பலன் கிடைக்கும் சூழல் உருவாவதால், தன்னம்பிக்கையுடன் செயல்பட முடியும்.

ஒரே நேரத்தில் பல பணிகளைக் கையாள வேண்டியிருந்தாலும், அவற்றை வெற்றிகரமாக முடிக்கும் வாய்ப்புள்ளது. பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படுவதுடன், ஏற்கெனவே செய்த முதலீடுகள் மூலம் லாபம் கிடைக்கலாம் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

மீனம்: பணியில் சாதனையும் குடும்ப உறவுகளில் முன்னேற்றமும்

மீன ராசியினருக்குப் பணியிடத்தில் புதிய வெற்றிகளையும் சாதனைகளையும் பெற வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. வருமானத்தை அதிகரிப்பதற்கான புதிய வழிகள் உருவாகலாம். பழைய திட்டங்களும் சிறப்பான செயல்பாடுகளும் நற்பலன்களைத் தரக்கூடும்.

குடும்பத்தில் நிலவும் சிக்கல்கள் தீர்ந்து உறவுகள் வலுப்பெறலாம். குடும்பச் சொத்து அல்லது பணம் கிடைப்பதற்கான வாய்ப்பும் உள்ளது. உடன்பிறந்தவர்களின் ஆதரவு, கடினமான சூழல்களைச் சமாளித்து முன்னேற உதவக்கூடும்.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



அரிப்பை அலட்சியப்படுத்தாதீர்கள்! ஒவ்வாமை அறிகுறிகளுக்கு கவனம் தேவை!



சருமத்தில் அரிப்பு, சிவப்பு, தடிப்பு போன்றவை மீண்டும் மீண்டும் ஏற்பட்டால், காரணத்தைக் கண்டறிவது அவசியம். ஒவ்வாமை மட்டுமின்றி, சரும வறட்சி, எக்சிமா போன்றவற்றாலும் அரிப்பு ஏற்படலாம்.

ஒவ்வாமை எப்படி ஏற்படுகிறது?

பொதுவாகத் தீங்கற்ற ஒரு பொருளுக்கு உடலின் நோய் எதிர்ப்புமண்டலம் அளவுக்கு அதிகமாக எதிர்வினையாற்றுவதே ஒவ்வாமை. சில ஒவ்வாமைகளில் எதிர்ப்புரதங்கள் மாஸ்ட் செல்களைத் தூண்டுவதால், ஹிஸ்டமின் உள்ளிட்ட வேதிப்பொருட்கள் வெளியாகி அரிப்பு, சிவப்பு, வீக்கம் ஏற்படுகின்றன.

சொறிவதால் தற்காலிக நிவாரணம் கிடைத்தாலும், தொடர்ந்து சொறிவது சருமத்தில் காயங்களையும் தொற்றையும் ஏற்படுத்தலாம். அரிப்புடன் உயர்ந்த தடிப்புகள் தோன்றும் 'அர்டிகேரியா' ஆறு வாரங்களுக்கு மேல் தொடர்ந்தால், அது நாட்பட்ட நிலையாகக் கருதப்படுகிறது.

குழந்தைகளின் டயப்பர் பராமரிப்பு

டயப்பர் பகுதியில் ஏற்படும் சிவப்பு அனைத்தும் ஒவ்வாமை அல்ல. ஈரப்பதம், உராய்வு, சிறுநீர் மற்றும் மலத்துடன் நீண்ட நேரத் தொடர்பும் சரும அழற்சியை ஏற்படுத்தலாம்.

டயப்பர் அணிவிக்கும் முன் சருமத்தை மென்மையாகச் சுத்தம் செய்து உலர்த்த வேண்டும். இறுக்கமில்லாத சரியான அளவைத் தேர்ந்தெடுத்து, ஈரமான அல்லது அழுக்கான டயப்பரை விரைவாக மாற்ற வேண்டும். தினமும் சிறிது நேரம் டயப்பர் இல்லாமல் வைத்திருப்பதும் உதவும். பருத்தித் துணி பயன்படுத்தினாலும் ஈரமானதும் மாற்றுவது அவசியம்.

குறிப்பிட்ட தயாரிப்பால் தொடர்ந்து சிவப்பு ஏற்பட்டால், அதன் பயன்பாட்டை நிறுத்தி ஆலோசனை பெறலாம். லிங்க் ஆக்ஸைடு கொண்ட பாதுகாப்புக் கிரீம் உதவக்கூடும். தடிப்பு அதிகரித்தாலோ, காய்ச்சல், கொப்புளம் அல்லது சீழ் ஏற்பட்டாலோ மருத்துவரை அணுக வேண்டும்.

காற்று மாசும் சுவாசப் பாதிப்புகளும்

தொழிற்சாலை, வாகனம் மற்றும் புகையிலைப் புகை காற்றின் தரத்தைப் பாதிக்கின்றன. காற்றிலுள்ள நுண்துகள்களும் சல்பர் டைஆக்ஸைடு போன்ற வாயுக்களும் கண், தொண்டை எரிச்சலையும் சுவாசப் பாதிப்புகளையும் ஏற்படுத்தலாம். நீண்ட காலப் பாதிப்பு இதயநோய், நுரையீரல் நோய் மற்றும் நுரையீரல் புற்றுநோய் அபாயத்துடன் தொடர்புடையது.

புகைப்பவர்களின் அருகில் இருப்பவர்களும் பாதிக்கப்படலாம். போக்குவரத்துக் காவலர்கள் போன்ற சாலையில் நீண்ட நேரம் பணிபுரிபவர்கள், தொடர்ந்து இருமல் அல்லது மூச்சுத்திணறல் இருந்தால் பரிசோதனை பெற வேண்டும்.

சளி, இருமல் இருந்தால் எப்போது மருத்துவரை அணுகுவது?

இன்ஃப்ளூயென்சா, நிமோனியா போன்ற தொற்றுகளை ஒவ்வாமை என்று தவறாகக் கருதக்கூடாது. சளி மஞ்சள் அல்லது பச்சை நிறமாக இருப்பது மட்டுமே ஆன்டிபயாட்டிக் தேவை என்பதை உறுதிப்படுத்தாது.

இருமலுடன் காய்ச்சல், மூச்சுத்திணறல், நெஞ்சுவலி அல்லது உடல்நிலை மோசமாதல் இருந்தால் மருத்துவ ஆலோசனை அவசியம். இதயநோய், சர்க்கரை நோய் உள்ளவர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஓய்வும் போதிய நீர்ச்சத்தும் உதவும்; யோகா, சுவாசப் பயிற்சிகள் மருத்துவச் சிகிச்சைக்கு மாற்றாகாது.

உதடு, நாக்கு அல்லது தொண்டையில் திடீர் வீக்கம், சுவாசச் சிரமம், மயக்கம் ஏற்பட்டால் உடனடியாக அவசர மருத்துவ உதவி பெற வேண்டும்.

ஒட்டன்சத்திரம் பெண்கள் பாதுகாப்பு சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கூட்டம்-சார்பு நீதிபதி ஜெயபிரகாஷ் பங்கேற்பு



ஒட்டன்சத்திரம். நவ. 12–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள சார்பு நீதிமன்றத்தில், பெண்களை பாலியல் தொந்தரவுகளில் இருந்து பாதுகாக்கும் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு சார்பு நீதிபதி ஜெயபிரகாஷ் தலைமை தாங்கினார். மாவட்ட உரிமையியல் நீதிபதி கபாலீஸ்வரன், குற்றவியல் நடுவர் நீதிபதி பிரவீனா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், பணியிடங்களில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் பாலியல் தொந்தரவுகள் மற்றும் பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்கும் சட்டங்கள், பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப் பாதுகாப்புகள், புகார் அளிக்கும் நடைமுறைகள் குறித்து வழக்கறிஞர் சி. பாக்கியலட்சுமி விழிப்புணர்வு ஏற்படுத்திப் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் நீதிமன்றப் பணியாளர்கள், வழக்கறிஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஷூ, சாக்ஸ், மழைக்கோட், ஸ்வெட்டர்... ரூ.52 கோடிக்கு டெண்டர்!



சென்னை, நவ. 12–

தமிழகத்தில் 2027–2028–ம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ள ஷூ, சாக்ஸ், மழைக்கோட் மற்றும் கம்பளி ஸ்வெட்டர் ஆகியவ ற்றுக்கான கொள்முதல் பணிக ளை மேற்கொள்ள ஒரே நாளில் 4 டெண்டர்கள் வெளியி டப்பட்டுள்ளன. இதற்காக மொத்தம் ரூ.52.05 கோடி மதிப்பில் டெண்டர்கள் கோரப்பட்டு ள்ளன. தமிழக அரசின் பள்ளிக்கல்வி த்துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் (TNTB&ESC) சார்பில் இந்த டெண்டர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக ஷூ வழங்குவதற்காக ரூ.37 கோடியே 24 லட்சம் மதிப்பில் முதல் டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது.

இதேபோல், ஷூவுடன் வழங்கப்பட உள்ள சாக்ஸ்களுக்காக ரூ.9 கோடியே 7 லட்சம் மதிப்பில் டெண்டர் கோரப்ப ட்டுள்ளது. மலைப்பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மழைக்காலங்களில் சிரமமின்றி பள்ளிக்கு சென்று வருவதற்காக மழைக்கோட் வழங்கப்பட உள்ளது. இதற்காக ரூ.3 கோடியே 32 லட்சம் மதிப்பில் டெண்டர் வெளியி டப்பட்டு ள்ளது. மொத்தம் 91 ஆயிரத்து 771 மழைக்கோட்டுகள் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மழைக்கோட்டுகள் 'செர்ரி ரெட்' (Cherry Red) நிறத்தில் தயாரிக்கப்பட உள்ளன. 28, 30, 32 மற்றும் 34 இன்ச் அளவுகளில் இவை வழங்கப்பட உள்ளன. கோவை, நீலகிரி, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல், சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு, ஈரோடு, தர்மபுரி, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலை, தேனி, திருச்சி, திருநெல்வேலி, திருப்பத்தூர், கோவை மாவட்டத்தில் உள்ள வால்பாறை, திருவ ண்ணாமலை, வேலூர் உள்ளிட்ட மலைப்பகுதி களில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு இந்த மழைக்கோட்டுகள் வழங்கப்பட உள்ளன.

இதேபோல், குளிர் அதிகமாக காணப்படும் மலைப்பகுதிகளில் பயிலும் அரசுப் பள்ளி மாணவர்க ளுக்கு கம்பளி ஸ்வெட்டர் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.2 கோடியே 42 லட்சம் மதிப்பில் நான்காவது டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஷூ, சாக்ஸ், மழைக்கோட் மற்றும் கம்பளி ஸ்வெட்டர் வழங்குவதற்காக மொத்தம் ரூ.52 கோடியே 5 லட்சம் மதிப்பில் 4 டெண்டர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

2027–2028–ம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு தேவையான பொருட்களை உரிய காலத்தில் வழங்குவதற்கான முன்னேற்பாடுகளின் ஒரு பகுதியாக இந்த டெண்டர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தாத்தா சொத்தில் தந்தைக்கு கிடைக்கும் பங்கை கேட்க பேரனுக்கு உரிமை இல்லை: உச்சநீதிமன்றம்!



புதுடெல்லி, நவ. 12–

தாத்தாவின் சொத்தைப் பாகப் பிரிவினை செய்யும்போது தந்தைக்குக் கிடைக்கும் சொத்தில் பங்கு கேட்க பேரனுக்கு உரிமையில்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.


தமிழகத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் என்ற நபருக்குச் சொந்தமான சொத்தில், அவரின் மகனான என்.குமரனுக்கு பாகப் பிரிவினை அளிக்கப்பட்டது. தனக்குச் சொத்தாக கிடைத்த நிலத்தை அவர் விற்பனை செய்தார். அந்த நிலம் தனது தாத்தாவின் கூட்டுக் குடும்ப சொத்து என்பதால், தந்தைக்கு அளிக்கப்பட்ட நிலத்தில் பாதியை தனக்கு பங்கு பிரித்தளிக்க வேண்டும் என்று குமரனின் மகன் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் அகஸ்டின் ஜார்ஜ் மாசி, சுனிதா அகர்வால் ஆகியோர் அடங்கிய அமர்வு அண்மையில் தீர்ப்பளித்தது. அப்போது நீதிபதிகள் அமர்வு கூறியதாவது: தாத்தாவின் (ராமகிருஷ்ணன்) மறைவுக்குப் பின்னர், அவரின் சொத்துகள் ஹிந்து வாரிசுரிமைச் சட்டம் 1956–இன் 8–ஆவது பிரிவின்படி, அவரின் நேரடி வாரிசுகளைச் சென்றடைந்தன. ஒவ்வொரு வாரிசுக்கும் ஒதுக்கப்பட்ட சொத்து அவரவருக்கு சொந்தமானது.

இந்த வழக்கில் ஹிந்து வாரிசுரிமைச் சட்டம் 1956–இன் 6–ஆவது பிரிவு அல்லது ஹிந்து வாரிசுரிமை தமிழ்நாடு திருத்தச் சட்டம் 1989 மூலம் சேர்க்கப்பட்ட 29(ஏ) பிரிவு பொருந்தாது.

ஹிந்து வாரிசுரிமைச் சட்டம் 1956–இன் 8–ஆவது பிரிவின் கீழ், தாத்தாவின் சொத்துகள் அவரின் நேரடி வாரிசுகளுக்குச் சென்றடைந்து, அவர்களுக்குள் பாகப் பிரிவினை செய்யப்பட்ட பின்னர், தந்தைக்குக் கிடைத்த சொத்து அவருக்கே முழுமையாகச் சொந்தமானதாக மாறிவிடும். தந்தைக்குக் கிடைத்த சொத்தில் பிறப்பின் அடிப்படையில் பங்கு கேட்க பேரனுக்கு எந்த உரிமையும் இல்லை என்று தீர்ப்பளித்தது.

வங்கக் கடலில் உருவாகிறது புயல் சின்னம்!



சென்னை, நவ. 12–

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை கடந்த அக். 15–ஆம் தேதி தொடங்கியது. அதன்பின்னர், வங்கக் கடலில் அடுத்தடுத்து உருவான இரு காற்றழுத்தத் தாழ்வுப் பகுதிகளும் அர்னாப், முரசு புயல்களாக மாறின. இவ்விரு புயல்களும் ஆந்திர மாநில கடற்கரைப் பகுதியில் கரையைக் கடந்தன. இந்தப் புயல்களால் தமிழகத்தில் பெரிய அளவு மழை பாதிப்பு ஏற்படவில்லை.

அதேபோல், அக்.1 முதல் நவ.11 வரையான காலகட்டத்தில் இயல்பாக 254.2 மி.மீ. மழை பதிவாகும். நிகழாண்டு 259.1 மி.மீ. மழையே பதிவானது. அதாவது, இயல்பைவிட 2 சதவீதம் அதிகமாக மழை பெய்தது. இந்த நிலையில், வங்கக் கடலில் 3–ஆவது புயல் சின்னம் உருவாவ தற்கான சாத்திக்கூறுகள் உருவாகியு ள்ளன. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய தென்மண்டல தலைவர் வி.ஆர்.துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதை யொட்டிய பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் தாக்கத்தால், தென்கிழக்கு வங்கக் கடலில் வெள்ளிக்கிழமை (நவ.13) காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) உருவாக வாய்ப்புள்ளது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து, நவ.14–ஆம் தேதி ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாகவும், நவ.15–இல் காற்றழுத்தத் தாழ்வு மண்ட லமாகவும் வலுப்பெற வாய்ப்புள்ளது.

இதன் காரணமாக டெல்டா, தென்மா வட்டங்கள், கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வியாழக்கிழமை (நவ. 12) முதல் நவ.15 வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. ஏனைய தமிழகத்தில் வட வானிலையே நிலவும். சென்னை மற்றும் புகர் பகுதிகளில் வியாழக்கிழமை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது.

இதற்கிடையே, வியாழக்கிழமை (நவ. 12) முதல் நவ. 15 வரை அந்தமான் கடல் மற்றும் தென்கிழக்கு வங்கக் கடலின் அநேக பகுதிகளில் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும். மீனவர்கள் அந்தப் பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் எனத் தெரிவித்துள்ளார். வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதால் நவ. 12–ஆம் தேதிக்குள் கடலில் உள்ள மீனவர்கள் கரை திரும்ப வேண்டும் என மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அறிவுறுத்தி யுள்ளது. அண்மையில் உருவான முரசு புயலில் சிக்கி காசிமேடு மீனவர்கள் 9 பேர் உயிரிழந்த நிலையில், இந்த முன்னெச்சரிக்கையை அரசு வெளியிட்டுள்ளது.

அதில், வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும், ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் வரும் 12–ஆம் தேதி இரவுக்குள் கரை திரும்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள் கலெக்டர் ஆய்வு!



கரூர், நவ. 12–

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.பிரசன்னா ராமசாமி, இ.ஆ.ப., க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்திற்கு ட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை சார்பில் முதல்வரின் கிராமசாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 51.24 லட்சம் மதிப்பீட்டில் லட்சுமிபுரம் முதல் (வழி) பூமண்டமபாளையம் நெடுங்கூர் வரை 1.375 கி. மீ நீளத்தில் புதிதாக போடப்பட்டுள்ள தார் சாலையின் தரத்தினை ஆய்வு செய்ததோடு, அது குறித்தான விளக்கங்களை துறை சார்ந்த அலுவலர்களுடன் கேட்டறியப்பட்டது.

தொடர்ந்து க. பரமத்தி ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவுகள் குறித்து கேட்டதோடு, உணவுகளை தரமானதாக வழங்க அறிவுறுத்தப்பட்டது. மேலும் அப்பள்ளி மாணவர்களுக்கு கற்பிக்கும் முறை குறித்து ஆய்வு மேற்கொண்டு மாணவர்களுக்கு எடுக்கப்பட்ட சமையலறை பாதுகாப்பு குறித்து மாணவர்களிடம் கலந்துரையாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆரியூர் ஊராட்சிக்குட்பட்ட ஆரியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அங்கன்வாடி மையத்தினை ஆய்வு மேற்கொண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு மேற்கொண்டு சுற்றுப்புறத்தை சுகாதாரமாக பராமரித்திட அங்கன்வாடி ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது மேலும் தொடக்கப்பள்ளி மாணவர்களின் கற்றல் திறன் ஆய்வு செய்யப்பட்டது.

தொடர்ந்து புஞ்சைகாளகுறிச்சி விவசாயி திரு. சந்திரசேகரன் அவர்களின் கண்வலிகிழங்கு தோட்டத்தில் துளி நீரில் அதிக பயிர் நுண்ணீர்ப் பாசனத்திட்டத்தின் கீழ் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டு ள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, விவசாயிடம் கலந்துரையாடப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.பிரசன்னா ராமசாமி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி) திரு. சு. தனசேகரன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர், ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் செய்தியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

வேலை வாய்ப்பு

ரயில்வே & இஸ்ரோவில் மொத்தம் 1,749 பணியிடங்கள்!

நிறுவனம்: ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB)
அறிவிப்பு எண்: 07/2026
வேலை வகை: மத்திய அரசு நிரந்தரப் பணி
பணியிடங்கள்: 1,688 NTPC (இளநிலை பட்டப்படிப்புக்கு முந்தைய நிலை) பணியிடங்கள்
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள்: 15.10.2026
கடைசி நாள்: 13.11.2026, இரவு 11:59 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: rrbapply.gov.in

இஸ்ரோ வேலைவாய்ப்பு 2026 61 பணியிடங்கள்!

நிறுவனம்: இஸ்ரோ யு.ஆர். ராவ் செயற்கைக்கோள் மையம் (URSC)
அறிவிப்பு எண்: URSC:04:2026
வேலை வகை: மத்திய அரசு நிரந்தரப் பணி
பணியிடங்கள்: 61 டெக்னீஷியன்–B, இலகுரக வாகன ஓட்டுநர், அலுவலக கார் ஓட்டுநர்–A மற்றும் கனரக வாகன ஓட்டுநர்–A
பணியிடம்: பெங்களூரு
விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள்: 24.10.2026, மாலை 5:00 மணி
கடைசி நாள்: 13.11.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: isro.gov.in

நகை பிரியர்களுக்கு ஜாக்பாட்!



சென்னை, நவ. 12–

தங்கம் விலை மீண்டும் தடாலடியாக சரிந்துள்ளது. அதன்படி சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.200 குறைந்து, ஒரு கிராம் ரூ.12,815–க்கும், சவரனுக்கு ரூ.1,600 குறைந்து ஒரு சவரன் ரூ.1,02,520க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை எந்த மாற்றமும் இன்றி ஒரு கிராம் ரூ.200க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



பழனி நகராட்சி மேல்நிலைப் பள்ளியில், முன்னாள் மாணவர்கள் சங்கத்தன் சார்பாக, கடந்த வருடம் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது, இந்த வருடம் முதலாம் ஆண்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பூமாலை வணிக வளாகம் ஒப்பந்த அடிப்படையில் வாடகை: கலெக்டர் தகவல்!

புதுக்கோட்டை, நவ. 12–

புதுக்கோட்டை மாவட்டம், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் (DSMS), பூமாலை வணிக வளாகம் மேல்தளத்தில் காலியாக உள்ள அலுவலக வளாக த்தினை ஒப்பந்த அடிப்படை யில் வாடகைக்கு விடுவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

எனவே, விருப்பமுள்ள தகுதிவாய்ந்த அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் தங்களது விண்ணப்பத்தினை திட்ட இயக்குநர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஒருங்கிணைந்த வளாகம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, புதுக்கோட்டை என்ற முகவரிக்கு 13.11.2026 –க்குள் சமர்ப்பித்திட புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் மு. அருணா கேட்டுக்கொண்டுள்ளார்.



இஸ்மாயில் லக்கி டூராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

தமிழ் எண்ணெய் பலகாரம்
தமிழ் நாட்டு வகை காரம் & இனிப்பு மற்றும் வடமாநில இனிப்பு
தயாரிப்பு & விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மற்றும் கிளைகள்
நிறுவனர்: பே. தேவகாமன், மதுரை
2331731
4377877

இன்றைய கார்ட்டூன்



பால் விலை உயர்வு! அமுல், மதர் டைரி புதிய விலைகள் நவம்பர் 12 முதல் அமல்!

புதுடில்லி, நவ. 12–

பால் கொள்முதல், கால்நடைத் தீவனம், பதப்படுத்துதல் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளதால், அமுல் மற்றும் மதர் டைரி நிறுவனங்கள் பால் விலையை உயர்த்தியுள்ளன. புதிய விலைகள் நவம்பர் 12ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளன.

அமுல் நிறுவனத்தின் அறிவிப்பின்படி, அதிகம் விற்பனையாகும் முக்கிய பால் வகைகளின் விலை லிட்டருக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை உயர்த்தப்பட்டுள்ளது. மூன்று சதவீதக் கொழுப்புச் சத்துள்ள அமுல் தாஸா டோன்டு பால் லிட்டருக்கு ரூ.2 உயர்ந்துள்ளது. ஆறு சதவீதக் கொழுப்புச் சத்துள்ள அமுல் கோல்டு பால் லிட்டருக்கு ரூ.4 அதிகரித்துள்ளது.

அமுல் பாலைச் சந்தைப்படுத்தும் குஜராத் கூட்டுறவுப் பால் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு, உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் செலவுகள் அதிகரித்திருப்பதே இந்த விலை மாற்றத்துக்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளது. பசுந்தீவனம், உலர் தீவனம், கால்நடை உணவுக்கான மூலப்பொருள்கள், பால் பாக்கெட் தயாரிப்புப் பொருள்கள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் செலவுகள் உயர்ந்துள்ளதாகவும் விளக்கமளித்துள்ளது.

மதர் டைரி புதிய விலைகள்

டெல்லி மற்றும் தேசியத் தலைநகர் பிராந்தியத்தில் மதர் டைரி நிறுவனத்தின் பல்வேறு பால் வகைகளின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது.

பால் வகை	பழைய விலை	புதிய விலை
இயந்திர டோன்டு பால்	₹58	₹60
பாக்கெட் டோன்டு பால்	₹60	₹62
டபுள் டோன்டு பால்	₹54	₹56
முழுக் கொழுப்புப் பால்	₹72	₹76
பசும்பால்	₹62	₹65

மதர் டைரி நிறுவனம் டெல்லி தேசியத் தலைநகர் பிராந்தியத்தில் நாளொன்றுக்கு சுமார் 35 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்கிறது. அதன் ஒட்டுமொத்த தினசரி விற்பனை



50 லட்சம் லிட்டருக்கும் அதிகமாக உள்ளது.

கொள்முதல் செலவு அதிகரிப்பு

விவசாயிகளிடமிருந்து வாங்கப்படும் பாலுக்கான கொள்முதல் விலை உயர்ந்துள்ளதால், கூடுதல் செலவின் ஒரு பகுதி நுகர்வோரிடம் பகிரப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குஜராத் உள்ளிட்ட பகுதிகளில் குறைவான மற்றும் சீரற்ற மழைப்பொழிவு நிலவுவதால் பால் உற்பத்தியாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக அமுல் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. கடந்த ஓராண்டில் அதன் உறுப்பினர் பால் ஒன்றியங்கள், விவசாயிகளுக்கான கொள்முதல் விலையை நான்கு முதல் ஐந்து சதவீதம் வரை உயர்த்தியுள்ளன. உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை வழங்கவும் அவர்களுக்கு ஆதரவளிக்கவும் சில்லறை விலை மாற்றம் தேவைப்படுவதாகக் கூட்டமைப்பு விளக்கியுள்ளது.

அமுல் மற்றும் மதர் டைரி நிறுவனங்கள் இதற்கு முன்பு கடந்த மே மாதம் பால் விலையை உயர்த்தியிருந்தன. அன்றாட அத்தியாவசியப் பொருளான பாலின் விலை மீண்டும் உயர்ந்திருப்பது குடும்பங்களின் மாதாந்திரச் செலவை அதிகரிக்கும்.

பிரசாதக் கடையா, உணவகமா? மீனாட்சி அம்மன் கோயிலில் விளக்கு அலங்காரம், உணவு விற்பனை குறித்து 'ஆலயம் காப்போம்' அமைப்பு கேள்வி!



மதுரை, நவ. 12–

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் முக்குருணி பிள்ளையார் அருகிலுள்ள பிரசாதக் கடையின் அமைப்பு, மின் விளக்குகள் மற்றும் கோயில் வளாகத்தில் உணவு அருந்துதல் தொடர்பாக 'ஆலயம் காப்போம்' அமைப்பின் மதுரை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தினகரன் சுந்தரம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் நவம்பர் 12ஆம் தேதியிட்ட, 002/JC/MDU/028/2026 என்ற எண்ணுடைய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

சிதம்பரம் நடராஜர் கோயில் வளாகம் வணிகரீதியான 'உணவுக் கூடம்' போன்று மாற்றப்பட்டுள்ளதாக, அக்டோபர் 30, 2026 அன்று வழங்கிய தீர்ப்பில் சென்னை உயர்நீதிமன்றம் கடுமையாகக் கண்டித்துள்ளது. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கோயிலுக்குள் உள்ள உணவுக் கூடத்தைப் பயன்படுத்த அனுமதிப்பதன் மூலம் புனிதமான கோயில் வளாகம் உணவுக் கூடமாக மாற்றப்பட்டிருப்பதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் முக்குருணி பிள்ளையார் அருகிலுள்ள பிரசாதக் கடையின் தற்போதைய நிலையையும் கவனிக்க வேண்டும்.

சுவாமி சன்னதி இரண்டாம் பிரகாரத்தில் அமைந்துள்ள இந்தப் பிரசாதக் கடையில் ஒளிரும் மின் விளம்பரப் பலகை, அதிக மின்சாரம் தேவைப்படும் விளக்குகள் மற்றும் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருள்களின் புகைப்படங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. இந்த அமைப்பு, சரவண பவன் அல்லது சபரி போன்ற உணவகத்துக்கு வந்திருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

இதே பகுதியில் கும்பாபிஷேகத்தைக் காரணம் காட்டி ரூ.57 லட்சம் மதிப்பில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாகக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கான டெண்டர் எண் 3900/2025/E2, தேதி 06.06.2026 என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த விளக்கு அமைப்புகள் கோயிலுக்கு மதுரை சித்திரைப் பொருட்காட்சி போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக விமர்சித்துள்ள அவர், "ராட்சத ராட்டினம், மிளகாய் பஜ்ஜி, மசாலா டெல்லி அப்பளம் இல்லாத குறைதான்" என்றும் தனது எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார்.

அதிக எண்ணிக்கையிலான, தேவையற்ற விளக்குகள் பகல் நேரத்திலும் ஒளிர்வதாகக் குற்றம்சாட்டியுள்ள அவர், இந்தச் செலவினத்தைப் பார்க்கும்போது, "யார் வீட்டு அப்பன் பணம்?" என்ற சொற்றொடர் நினைவுக்கு வருவதாகவும் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், கோயிலுடன் தொடர்புடைய ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு, பழைய கல்யாண மண்டபத்தில் விருந்து நடத்தப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். அருகிலேயே அன்னதானக் கூடம் இருந்தபோதும் அங்கு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டதற்கு 'ஆலயம் காப்போம்' அமைப்பு சார்பில் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வரும் கார்த்திகை மாதம் தொடங்கி ஜனவரி 26, 2027 வரை ஐயப்ப பக்தர்களின் வருகை அதிகமாக இருக்கும் என்றும், அதன் காரணமாகப் பிரசாதக் கடையின் வருவாயும் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரசாதம் வாங்கும் பக்தர்கள் அந்த இடத்திலேயே உணவு அருந்திவிட்டு, அங்கேயே கை மற்றும் வாய் கழுவும் நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று 'ஆலயம் காப்போம்' அமைப்பு சார்பில் கேட்டுக்கொள்வதாக தினகரன் சுந்தரம் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"நன்றி, வணக்கம், வந்தே மாதரம்"

இப்படிக்கு

தினகரன் சுந்தரம்,

ஒருங்கிணைப்பாளர்,

ஆலயம் காப்போம், மதுரை மாவட்டம்.

பண்டிகைகளில் டாஸ்மாக் மூடப்படுமா?

சென்னை, நவ.12–

தீபாவளி பண்டிகை நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் தமிழ்நாட்டில் 8 கொலைச் சம்பவங்கள் நடந்தது மக்களிடையே அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. தொடர்ந்து அடுத்த 2 நாள்களும் கொலைச் சம்பவங்கள் அதிகரித்து காணப்பட்ட நிலையில், எதிர்க்கட்சித் தலைவர்கள் கடும் கண்டனத்தை பதிவு செய்திருந்தனர். இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் காவல்துறை தரப்பில் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நூற்றுக்கணக்கான ரௌடிகள் கைது செய்யப்பட்டனர்.

இதனிடையே, மாநிலத்தின் சட்டம்



– ஒழுங்கு நிலவரம் குறித்து முதல்வர் ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டத்தை செவ்வாய்க்கிழமை நடத்தினார். தலைமைச் செயலர் சாய்குமார், உள்துறைச் செயலர் கார்த்திக், காவல் துறை தலைமை இயக்குநர் மகேஷ்குமார் அகர்வால், சட்டம்–ஒழுங்கு ஏடிஜிபி அன்பு, உளவுப் பிரிவு ஐஜி அஸ்ரா கார்க் உள்ளிட்ட காவல் துறை உயர் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் பண்டிகை நாள்கள் மற்றும் அதற்கு முந்தைய நாளில் டாஸ்மாக் கடைகள மூடுவது தொடர்பாக முதல்வர் விஜய் ஆலோசனை நடத்தியிருப்பதாகவும், இதுதொடர்பாக அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீபாவளி பண்டிகை அன்று மற்றும் அதனையொட்டி நடந்த பெரும்பாலான கொலைகள் மதுபோதையில் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பத்திரப்பதிவு: இனி ஆன்லைன் டோக்கன்!

சென்னை, நவ. 12–

தமிழகத்தில் பத்திரப்பதிவு பணிகள், 'ஆன்லைன்' முறைக்கு மாற்றப்பட்டு வருகின்றன. இதற்கு ஆவண எழுத்தர்கள் எதிர்ப்பு தெரிவித்து, போராட்டத்தில் ஈடுபட்டனர். முன்னதாக பதிவுத்துறை வெளியிட்டிருந்த அறிவிப்பில் கூறப்பட்டிருந்ததாவது:–

தமிழகத்தில் வீடு, மனை வாங்குவோர் அதற்கான பத்திரங்களை தயாரிக்க சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரங்கள் தாக்கல் செய்வதை தாங்களே மேற்கொள்ளலாம். ஆவண எழுத்தர்களுக்காக காத்திருக்காமல் பொது மக்கள் இந்த பணிகளை நேரடியாக மேற்கொள்ளலாம்.

பதிவுத்துறையின் www.tnreginet.gov.



in என்ற இணையதளத்தில் குடிமக்களுக்கான நுழைவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்கள் இந்த நுழைவில் அடிப்படை தகவல்கள் அளித்து தங்கள் பெயரில் 'லாக் இன், பாஸ்வேர்ட்' உருவாக்க வேண்டும்.

இதையடுத்து பதிவு செய்ய வேண்டிய ஆவண வகையை தேர்வு செய்து அடுத்தடுத்து நான்கு நிலைகளில் தேவையான தகவல்களை உள்ளீடு செய்தால் போதும்.

பதிவுக்கு ஏற்ற வரைவு பத்திரம் தயாராகி விடும். இதன் அடுத்த கட்டங்களில் இணையதளத்தில் தேவையான விபரங்களை அளித்தால் அடையாள எண் உருவாகும். அதைத் தொடர்ந்து அடுத்த கட்டத்தில் பத்திரப்பதிவுக்கான நாள், நேரம் ஒதுக்கி 'டோக்கன்' ஆன்லைன் முறையில் கிடைத்துவிடும். இதை எடுத்துக் கொண்டு சம்பந்தப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்துக்கு நேரில் சென்றால் பத்திரப்பதிவு செய்யலாம்.

இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

ஆட்டோ மீட்டர் திருத்தினால்தான் எப்.சி.!

சென்னை, நவ. 12–

ஆட்டோக்களில் புதிய கட்டணத்துக்கு ஏற்ப, மீட்டர்களை திருத்தி அமைத்தால் மட்டுமே. எப்.சி., எனப்படும், தகுதிச் சான்று வழங்கப்படும்' என, தமிழக போக்குவரத்து ஆணையரகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, தமிழக போக்குவரத்து ஆணையரக அதிகாரிகள் கூறுகையில், "தமிழகத்தில் ஓடும் ஆட்டோக்களுக்கு, 13 ஆண்டுகளுக்குப் பின், கடந்த மாதம் 28–ந்தேதி முதல், ஆட்டோ கட்டணம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப, தமிழகம் முழுதும் இயங்கும், 4.20 லட்சம் ஆட்டோக்களின் மீட்டர்களை திருத்தி அமைக்க, 6



மாதங்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப கூடுதல் தொழில்நுட்பப் பணியாளர்களை ஈடுபடுத்தி, மீட்டர் திருத்தும் பணியை விரைந்து முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. தற்போது ஓடும் பழைய ஆட்டோக்களை தொடர்ந்து இயக்க, 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை, எப்.சி. எனப்படும் தகுதிச்சான்று பெற வேண்டும். அதன்படி, வட்டார போக்குவரத்து அலுவலகங்களுக்கு வரும், பழைய ஆட்டோக்களில், புதிய கட்டணத்துடன் திருத்தப்பட்ட மீட்டர், கட்டாயம் இருக்க வேண்டும்.

'மீட்டர் இல்லா விட்டால், எப்.சி., வழங்கக் கூடாது என, வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆட்டோவில் அதிக கட்டணம் வசூலிப்பு உள்ளிட்ட விதிமீறல்களைக் கண்காணிக்க, தமிழகம் முழுதும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில், சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளனர்.

அன்பில் மகேஷுக்கு ஜாமின் கிடைக்குமா?



சென்னை, நவ. 12–

தமிழ்நாட்டில் உள்ள தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் உள்ளிட்ட அனுமதிகளை பெற்றுத்தருவதாகக்கூறி கட்சி நிதி என்ற பெயரில் பல கோடி ரூபாய் லஞ்சமாக பெற்றதாக தி.மு.க. முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் பி.டி.அரசகுமார் என்பவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டார். முன்னாள் எம்.எல்.ஏ. முத்துக் குமார், சரவணன் ஆகியோர் சரணடைந்துள்ளனர்.

இந்த வழக்கில் கைதாகி சிறையில் இருக்கும் அன்பில் மகேஷ் ஜாமின் மனுவை லஞ்ச ஒழிப்பு வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டு தள்ளுபடி செய்துள்ளது. இதையடுத்து, ஜாமின் கேட்டு சென்னை ஐகோர்ட்டில் அன்பில் மகேஷ் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்கக் கோரி ஐகோர்ட்டு நீதிபதி வி.லட்சுமிநாராயணனிடம், அன்பில் மகேஷ் தரப்பில் மூத்த வக்கீல் பி.வில்சன் ஆஜராகி கோரிக்கை விடுத்தார்.

அதற்கு நீதிபதி, ஜாமின் கோரும் மனுவுக்கு எண்ணிடும் பணிகள் முடிந்தால் இன்று (வியாழக்கிழமை) விசாரணைக்கு எடுக்கப்படும் என்றார். அதேபோல, அன்பில் மகேஷ் மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி அவர் தாக்கல் செய் துள்ள மனு மீதான விசாரணையை தள்ளி வைக்க வேண்டும் என்று மூத்த வக்கீல் கோரிக்கை விடுத்தார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, வழக்கு விசாரணையை வருகிற 30–ந்தேதிக்கு தள்ளி வைத்து உத்தரவிட்டார்.

அனைத்து ரயில் நிலையத்திலும் 6 மாதங்களில் பேட்டரி கார் வசதி!

மதுரை, நவ, 12–

அனைத்து ரயில் நிலையங்களிலும் 6 மாதத்தில் பேட்டரி கார் சேவையை நடைமுறைபடுத்த வேண்டுமென ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. தஞ்சாவூரை சேர்ந்த விமலநாதன், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில், "திருச்சி ரயில் நிலையத்தில் 2017ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பேட்டரி கார் சேவை ஆரம்பத்தில் இலவசமாக வழங்கப்பட்டது. 2018ம் ஆண்டு முதல் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதே சேவை மதுரை ரயில் நிலையத்தில் இலவசமாக வழங்கப்படுகிறது. மதுரை மற்றும் திருச்சி ரயில்வே கோட்டங்களில் உள்ள 251 ரயில் நிலையங்களில் வெறும் 11 ரயில் நிலையங்களில் மட்டுமே இந்த பேட்டரி கார் சேவை உள்ளது. மீதம் உள்ள 241 நிலையங்களில் இந்த சேவை இல்லை. ரயில்வே வாரியத்தின் சுற்றறிக்கைகளின் படி, மாற்றுத்திறனாளிகள், முதியோர் உள்ளிட்டோருக்கு பேட்டரி கார் சேவையை இலவசமாக வழங்குவதற்கான ஏற்பாடு உள்ளது. எனவே, திருச்சி ரயில் நிலையத்திலும் இலவச பேட்டரி கார் சேவையை வழங்குமாறு உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் பி.வேல்முருகன் கே.கே.ராமகிருஷ்ணன் ஆகியோர், "அனைத்து ரயில் நிலையங்களிலும் பேட்டரி கார் வசதியை 6 மாதத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்" என உத்தரவிட்டு மனுவை முடித்து வைத்தனர்.

சினிமா துளிகள்..!

நடிகையுடன் நிச்சயதார்த்தம் செய்துகொண்ட இந்திய கிரிக்கெட் வீரர் அர்ஷ்தீப் சிங்!



இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்தீப் சிங், நடிகை சம்ரீன் கவுருடன் நிச்சயதார்த்தம் செய்துகொண்டார். இது தொடர்பான காதல் நிறைந்த புகைப்படங்களை இருவரும் சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளனர்.

அர்ஷ்தீப் சிங் – சம்ரீன் கவுர் ஜோடி நவம்பர் 11–ம் தேதி நியூசிலாந்தில் நிச்சயதார்த்தம் செய்துகொண்டுள்ளனர். இந்திய அணியுடன் நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அர்ஷ்தீப்புடன் சம்ரீன் கவுரும் அங்கு சென்றுள்ளார்.

அப்போது கடற்கரைப் பகுதியில் அர்ஷ்தீப் சிங், சம்ரீனிடம் தனது காதலை வெளிப்படுத்தி, மோதிரம் அணிவித்து திருமணத்துக்கு சம்மதம் கேட்டுள்ளார். இதுதொடர்பான புகைப்படங்களை இருவரும் தங்களது இன்ஸ்டாகிராம் பக்கங்களில் பகிர்ந்துள்ளனர். ஒரு புகைப்படத்தில் அர்ஷ்தீப் மண்டியிட்டு மோதிரம் அணிவிக்க, மற்றொரு புகைப்படத்தில் இருவரும் மகிழ்ச்சியுடன் கட்டியணைத்துக் கொள்கின்றனர்.

இந்தப் புகைப்படங்களுடன் இருவரும் இணைந்து, "வாழ்க்கை எத்தனையோ விஷயங்களைக் கொடுத்திருக்கலாம். ஆனால், ஒருவரையொருவர் எங்களுக்குக் கொடுத்ததுதான் மிகப்பெரிய மகிழ்ச்சி. வாழ்நாள் முழுவதும் ஒன்றாகப் பயணிக்கிறோம்" என்று பதிவிட்டுள்ளனர். மேலும், '11.11.2026' என்ற தேதியையும் குறிப்பிட்டுள்ளனர். இந்தப் பதிவைத் தொடர்ந்து ரசிகர்கள் மற்றும் கிரிக்கெட் பிரபலங்கள் பலரும் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

யார் இந்த சம்ரீன் கவுர்?

ஜம்மு – காஷ்மீரைச் சேர்ந்த சம்ரீன் கவுர் நடிகை மற்றும் மாடலாகப் பணியாற்றி வருகிறார். 2018–ம் ஆண்டு நடைபெற்ற ஃபெமினா மிஸ் இந்தியா போட்டியில் இறுதிப் போட்டியாளர்களில் ஒருவராக இடம்பெற்றார். ரன்வீர் சிங் நடிப்பில் வெளியான '83' திரைப்படம், 'சர்தார் ஜி 2' உள்ளிட்ட படங்களிலும், 'நெயில் பாலிஷ்' இணையத் தொடரிலும் நடித்துள்ளார். மேலும், குரு ரந்தாவா, பாத்ஷா உள்ளிட்ட பாடகர்களின் இசை ஆல்பங்களிலும் இடம்பெற்றுள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020